எண். 71/2026 நாள்: 01.07.2026

தமிழ் நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003
செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய பதவிகளுக்கு (அறிவிக்கை எண். 10/2025, நாள் 13.06.2025 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) நடைபெற்ற தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 27.02.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (பட்டயம் / தொழிற்பயிற்சி நிலை) அடங்கிய கீழ்கண்ட பதவிகளுக்கான இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை–600 003ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் 08.07.2026 முதல் 10.07.2026 வரை நடைபெற உள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு நாள்: 08.07.2026 முதல் 10.07.2026 வரை.	இளநிலை பயிற்சி அலுவலர் (அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர்) (பதவிக் குறியீடு–3617), இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்படுத்தப்பட்ட கணினி எண் கட்டுப்பாடு இயந்திர தொழில் நுட்பவியலாளர்) (பதவிக் குறியீடு–3619), இளநிலை பயிற்சி அலுவலர் (ஆலையில் தளவாட உதவியாளர்) (பதவிக் குறியீடு–3628), இளநிலை பயிற்சி அலுவலர் (தொழிற்துறை எந்திரனியல் மற்றும் எண்ணியல் உற்பத்தி தொழில் நுட்பவியளாளர்) (பதவிக் குறியீடு–3629), இளநிலை பயிற்சி அலுவலர் (இயந்திர வேலையாள்) (பதவிக் குறியீடு–3630), இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் தானியங்கி வாகனங்கள் பழுதுபார்த்தல்) (பதவிக் குறியீடு–3632), இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் இரண்டு மற்றும் மூன்று சக்கரவாகனம்) (பதவிக் குறியீடு–3633), இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மின்சார வாகனம்) (பதவிக் குறியீடு–3634), இளநிலை பயிற்சி அலுவலர் (கம்மியர் மோட்டார் வாகனம்) (பதவிக் குறியீடு–3635), இளநிலை பயிற்சி அலுவலர் (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாடு

	மற்றும் தானியக்கம்) (பதவிக் குறியீடு–3636), இளநிலை பயிற்சி அலுவலர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பவியல் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பவியலாளர்) (பதவிக் குறியீடு–3637), இளநிலை பயிற்சி அலுவலர் (மேம்பட்ட இயந்திர கருவிகள் இயக்குபவர்) (பதவிக் குறியீடு–3638), இளநிலை பயிற்சி அலுவலர் (விசைக்குழாய் இயக்குபவர் மற்றும் கம்மியர்) (பதவிக் குறியீடு–3639), இளநிலை பயிற்சி அலுவலர் (கடைசலர்) (பதவிக் குறியீடு–3646) மற்றும் இளநிலை பயிற்சி அலுவலர் (பற்றவைப்பவர்) (பதவிக் குறியீடு–3647)

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண் / இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E–mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி இரண்டாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப.,
செயலாளர்